Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 244

வெள்ளிக்கிழமை 28 ஜூலை 2023

ஆடி 12 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# தமிழர் தாயகத்தில் இன்று ஹர்த்தால்!

**முல்லைத்தீவு, ஜூலை 28**

**முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட இலங்கையின் பல பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளுக்கு நீதிகோரியும், சர்வதேச கண்காணிப்பின் கீழ் உண்மைகளை வெளிப்படுத்த வலியுறுத்தியும் தமிழர் தாயகத்தில் இன்று முழு அடைப்பு கடைப்பிடிக்கப்படவுள்ளது. இந்த ஹர்த்தாலுக்கு பல்வேறு பொது அமைப்புகளும் தமது ஆதரவை வெளியிட்டுள்ளதால், இன்று வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இயல்பு வாழ்க்கை முடங்குமென எதிர்பார்க்கப் படுகின்றது.**

»11

## புதைகுழிகளுக்கு நீதி தேவை பல்கலை ஊழியர்கள் ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூலை 28
தமிழர் தாயகத்தில் இன்று நடைபெறும் ஹர்த்தாலுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் முற்றுமுழுதான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

»11

## கொலைக் கலாசாரத்தினது பிரதிபலிப்பே புதைகுழிகள்!

### யாழ். பல்கலை ஆசிரியர் சங்கம் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்;, ஜூலை 28
தமிழர் தாயகத்தில் இன்று இடம்பெறும் ஹர்த்தாலுக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

»11

## தனியார் போக்குவரத்து முல்லையில் முடங்கும்

முல்லைத்தீவு, ஜூலை 28
முல்லைத்தீவில் இன்று இடம்பெறும் ஹர்த்தாலுக்கு ஆதரவாக, முல்லைத்தீவில் இன்று தனியார் பேருந்துச் சேவைகள் இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

»11

## வெளியக சுயநிர்ணயத்தை கோருவதற்குத் தயங்கோம்

### சொல்கிறார் சம்பந்தன்



கொழும்பு, ஜூலை 28
முழுமையான உள்ளக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாவிட்டால் அதற்கு மாற்றீடாக நாங்கள் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோருவோம். ஆகையால் நாட்டின் நன்மை கருதி தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கருதி நல்ல

»11

## வசந்த முதலிகே மீண்டும் கைது!

கொழும்பு, ஜூலை 28
அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் இணைப்பாளர் வசந்த

»11

## இலங்கையில் இன்று இம்மானுவேல் மக்ரோன்

விரிவு பக் - 5



பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், மிகக் குறுகிய காலப் பயணமாக இன்று இலங்கைக்கு வரவுள்ளார். அவர் ஜனாதிபதி ரணிலைச் சந்தித்துப் பேசவுள்ளார். (ம)

## 10 கிராம் ஹெரோய்னுடன் நால்வர் கைது!

யாழ்., ஜூலை 28
10 கிராம் 220 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில்

»11

## உணவுப் பொருள்களுக்கு இனிமேல் விலைநிர்ணயம்

### யாழ். மாவட்டச் செயலகம் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூலை 28
யாழ்ப்பாண மாவட்டத்தில் சிற்றுண்டிகள் உள்ளிட்ட உணவுப்பொருள்களுக்கு எதிர்

»11

## கனேடிய அமைச்சரானார் ஹரி ஆனந்தசங்கரி!



கனடாவின் பழங்குடியின சுதேசிய உறவுகளுக்கான அமைச்சராக ஹரி ஆனந்த சங்கரி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஈழத் தமிழர்களினதும் கனேடிய சுதேசிய இனங்களினதும் நலனுக்காகத் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

விரிவு பக் - 5

## நான்கு வயதுச் சிறுவனை காவுவாங்கிய மண்கிணறு

### கிளிநொச்சியில் துயரம்

கிளிநொச்சி, ஜூலை 28
கிளிநொச்சி - பரந்தன் காஞ்சிபுரத்தில் பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்த சிறுவனொருவன்

»11

இரண்டே நாள்களில்

## யாழ். மாவட்டத்தில் இந்திய முட்டைகள்

### 35 ரூபாவுக்கு சதொசவில் பெறலாம்

கொழும்பு, ஜூலை 28
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் இன்னும் இரண்டே நாள்

»09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்குப் பிரச்சினையில் அரசியல் ஆதாயம் தேடும் ரணில்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜூலை 28**

**வடக்கு, கிழக்குப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி மேற்கொண்டுள்ள நடவடிக்கை, அரசியல் ஆதாயத்துக் கான நகர்வு என்பது தெளிவாகிறது. அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாகப் பேசுவதென்றால் முதலில் மாகாணசபைத் தேர்தல் களை நடத்தி, நான்கரை வருடங்களாக முடங்கியுள்ள மாகாண சபைகளை இயக்கவேண்டும்.**

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய மக்கள் சக்தி தெரி வித்துள்ளது.

ஜனாதிபதியினால் நேற்றுமுன்தினம் கூட்டப்பட்ட சர்வகட்சிக் கூட்டத்தின் பின்னர், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்ட அறிக்கையி லேயே மேற்கண்டவாறு தெரிவிக் கப்பட்டுள்ளது. அதில் மேலும் உள்ளதாவது:

வடக்கு, கிழக்கு பிரச்சினை தொடர் பில் ஜனாதிபதியால் அழைப்பு விடுக்கப்பட்ட சர்வகட்சி மாநாடு ஜனாதிபதியின் வழமையான அர சியல் செயற்பாட்டின் ஓர் அங்கமே யன்றி வேறில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. வடக்கு, கிழக்கு விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் பதிலளிக்க வேண் டும் என்று ஜனாதிபதி கேட்கின்றார். ஆனால் என்ன நடக்க வேண்டும் என்றால் அதற்குப் பதில் பெறுவ தற்கான பிரேரணையை அரசாங் கம் முன்வைக்க வேண்டும். இந் தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஜனாதிபதிக்கு உண்மையான விருப் பம் இருந்தால், அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளும் இணைந்து ஒரு பிரேர ணையை முன்வைக்கவேண்டும். அரசாங்கத்தின் முன்மொழிவுகள் மற்றும் நிலைப்பாடுகளை கூறா மல் எதிர்க்கட்சிகளின் கருத்துகளை கேட்பதில் அர்த்தமில்லை - என் றுள்ளது. (எ-இ)

# நல்லிணக்க ஆணைக்குழு தமிழரின் எதிர்பார்ப்பல்ல

## பொறுப்புக்கூறலிலிருந்து தப்பிக்கும் உத்தியே சிவில் சமூக அமைப்புகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 28

அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது பாதிக் கப்பட்ட தரப்பினரின் கோரிக்கைகளுடன் ஒத்துப் போகவில்லை. ஆயுதப் போராட்டத்துக்கு வித்திட்ட அடிப்படைக்காரணிகளை நிவர்த்தி செய்யவுமில்லை. மாறாக அது மனிதஉரிமை மீறல் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் நல்லிணக்கம் என்ற போர்வையில் பொறுப்புக்கூறலில் இருந்து தப்பித்துக் கொள்வ தற்கே வழிவகுக்கின்றது. இவ்வாறு சிவில் சமூக அமைப்புகள் கூட்டாகச் சுட்டிக்காட்டியுள்ளன.

7 சிவில் சமூக அமைப்புகள் இணைந்து வெளி யிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் உள்ளதா வது பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகமானது கடந்த கால மீறல்கள் தொடர்பில் வழக்குப் பதிவு மற்றும் விசா ரணை ஆகிய செயன்முறைகளை உள்ளடக்கிய வலுவானதும், முழுமையானதுமான சர்வதேசப் பொறிமுறையைத் தொடர்ச்சியாகக் கோரிவருகின் றது. உண்மைக்கான ஆணைக்குழுவால் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றமுடியாது.

இந்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவானது மனிதஉரிமை மீறல் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் நல்லிணக்கம் என்ற போர்வையில் பொறுப்புக்கூறலில் இருந்து தப்பித்துக்கொள்வ தற்கே வழிவகுக்கும். ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தை இலங்கை அலட்சியப்படுத்தியுள்ளமையும், தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாகக் கட்டவிழ்த்துவிடப்பட் டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சிங்களம யமாக்கும் செயற்பாடுகளும் உண்மை மற்றும் நல் லிணக்க ஆணைக்குழு தொடர்பான முன்மொழிவு வெறும் கண்துடைப்பு நடவடிக்கையே என்பதைக் காண்பிக்கின்றன.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் உடனடியாக நிறுத்தப்படுவதுடன் சர்வதேச சமூகத் தின் பங்கேற்புடன் அவசியமான ஏற்பாடுகளை உள் ளடக்கிய, நிலைமாறுகால நீதியை அடைந்துகொள்வ தற்கு ஏதுவான விரிவான அணுகுமுறையை நிறுவ வேண்டும் - என்றுள்ளது. (எ-இ)



# தங்கப்பாதையில் பயணித்த ரஜினி

கொழும்பு, ஜூலை 28

கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக மாலை தீவு சென்றிருந்த சுப்பர்ஸ்டார் ரஜனிகாந்த் மீள வும் கட்டுநாயக்கவூடாக சென்னை திரும்பியுள்ளார். கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள தங்கப்பா தையூடாக ரஜினிகாந்த் பயணிப்பதற்கு இலங்கை அனுமதி வழங்கியுள்ளது.

அதியுயர் பிரமுகர்களுக்கே தங்கப்பாதையூடாக பயணம் செய்யும் அனுமதி வழங்கப்படுகின் றமை குறிப்பிடத்தக்கது. (ச-6)

# மின்கட்டணம் செலுத்தாத அரச மருத்துவமனைகள்!

## *மின்சாரசபை சிவப்பு எச்சரிக்கை*

கொழும்பு, ஜூலை 28

மின்கட்டணத்தைச் செலுத்தாமை யால் கொழும்பு தேசிய மருத்து வமனை உட்பட பல மருத்து வமனைகளுக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்படவுள் ளது என இலங்கை மின்சாரசபை எச்சரித்துள்ளது.

கொழும்பு தேசிய மருத்துவமனை, மன்னார் பொது மருத்துவமனை, பேராதனை போதனா மருத்துவ மனை, கொழும்பு கிழக்கு முல்லேரியாவ மருத்து வமனை, தொற்றுநோய் மருத்துவமனை உட்பட்ப பல மருத்துவமனைகளுக்கு மின்கட்டண நிலுவை செலுத்தப்படாமையால் சிவப்பு அறிவித்தல் விடுக் கப்பட்டுள்ளது. பேராதனை மருத்துவமனை 70 மில்லியன் ரூபாவும் மன்னார் மருத்துவமனை 14 மில்லியன் ரூபாவும் செலுத்த வேண்டியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை சுகாதார அமைச்சும் மாகாணசபை களும் நிதியை இன்னமும் விடுவிக்கவில்லை என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

# அள்ளித்தர ரணில் தயார் தமிழ்க் கட்சிகளே தடை!

## *சுரேன் ராகவன் அங்கலாய்ப்பு*



கொழும்பு, ஜூலை 28

தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஒருமித்த கருத்து இல்லை. தமிழ் பொலிஸ் தேவையில்லை. தற் போதுள்ள பொலிஸ் சேவையில் தமிழர்களை நியமியுங்கள்.

- இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஜனாதிபதியால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட சர்வ கட்சிக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் ஏனையவர்கள் மத்தி யில் ஒருமித்த கருத்து இல்லை. 13 போதுமா? தேர்தல் வேண்டுமா? என்ற கருத்துகள் காணப்பட்டன. அவர் கள் அந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். சகோத ரத்துவத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் ஒற்றுமை தேவை. பொருளாதாரம் கட்டியெழுப்பப்படவேண்டும். வடக்கிலும், தெற்கிலும் பல பிரச்சினைகள் தீர்க்கப்ப டுகின்றன. அடுத்த மாதம் மீண்டும் சந்திப்போம் என்று நினைக்கின்றேன். இன்னும் தெளிவான மற்றும் ஒரு மித்த நிலைப்பாட்டுக்கு வர முடியும் - என்றார். (எ-இ)

# பொலிஸாருக்கு தட்டுப்பாடாம்



கொழும்பு, ஜூலை 28 20 ஆயிரம் வரையிலான பொலிஸ் உத்தியோகத்தர் களுக்குப் பற்றாக்குறை நிலவு கின்றது என்று பொதுமக் கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரி வித்துள்ளதாவது:-

சேவையில் இருந்து விலகுகின்றமை, ஓய்வு பெறுதல் மற்றும் அங்கவீனமடைதல் ஆகிய காரணங்களால் இந்த நிலைமை ஏற்பட்டுள் ளது. தற்போது 2 ஆயிரம் பொலிஸ் உத்தி யோகத்தர்களைப் புதிதாகச் சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. எதிர்காலத்தில் பொலிஸ் உத்தி யோகத்தர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படும் - என்றார். (எ-இ)



# பிராங்க்ளின் இலக்கிய விருது ஆஸியில் வென்ற சங்கரி!

கொழும்பு, ஜூலை 28

அவுஸ்திரேலியாவின் மிகப் பெரிய இலக்கியப் பரிசான 'மைல்ஸ் பிராங்க்ளின்' இலக்கிய விருதை புலம்பெயர் இலங்கைத் தமிழரான - அவுஸ்திரேலிய தமிழ்ச் சட்டத்தர ணியான சங்கரி சந்திரன் வென்றுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை சிட்னியிலுள்ள ஒவொலோ ஹோட்டலில் இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது.

சிட்னி மேற்கில் புலம்பெயர் இலங்கைத்தமிழர் ஒருவரால் நடத்தப்படும் முதியோர் இல்லத்தை மையமாக வைத்து சங்கரி சந்திரனால் எழுதப்பட்ட 'Chai Time at Cinnamon Gardens' என்ற நாவலுக்கே இந்த விருது அறிவிக்கப்பட் டுள்ளது. இந்த நாவலில் புலம்பெயர்ந்த வயோதிபர்களின் உள்ளக்கிடக்கைகளை இவர் பதிவு செய்துள்ளார். இவரது நாவலுக்கு 60 ஆயிரம் அவுஸ்திரேலியா டொலரும் பரிச ளிக்கப்பட்டுள்ளது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி அளவீட்டு நடவடிக்கைகள் மக்கள் எதிர்ப்பால் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

**வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகளை இலங்கைக் கடற்படையினருக்குச் சுவீகரிப்பதற்கான நில அளவீட்டு நடவடிக்கைகள் நேற்று நான்காவது நாளாகவும் மக்கள் எதிர்ப்பால் இடைநிறுத்தப்பட்டன.**



கடந்த சில தினங்களாக வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கட்டைக்காடு, உடுத்துறை ஆகிய இடங்களில் கடந்த தினங்களாக கடற்படையினருக்குக் காணி சுவீகரிப்பதற்காக முன்னெடுக்கப்படத் திட்டமிடப்பட்டிருந்த காணி அளவீட்டு நடவடிக்கைகள் மக்கள் எதிர்ப்பால் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இந்தநிலையில், நேற்று வியாழக்கிழமை செம்பியன்பற்று பகுதியில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவிருந்தன.

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கு (ஜே /426) கிராமசேவகர் பிரிவிலுள்ள நீக்கிலாப்பிள்ளை இமானுவெல் என்பவருக்குச் சொந்தமான 15 பேர்ச் (ஒன்றரைப் பரப்பு) காணியை இலங்கைக் கடற்படையினருக்கு நிரந்தரமாக சுவீகரிக்கும் நோக்கில் காணி அளவீட்டுப் பணி இடம்பெற உ்ள்ளது என்று காணி உரிமையாளருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

அளவீட்டு நடவடிக்கைக்காக அரச நில அளவையாளர் ம.மகாபிரதீபன் தலைமையிலான உத்தியோகத்தர்கள் அங்கு சென்றபோது, காணி உரிமையாளர், செம்பியன்பற்று கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம மக்கள் மற்றும் மக்கள் பிரதி நிதிகள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தனர். அதையடுத்து காணி அளவீட்டு நடவடிக்கைகளை நில அளவைத் திணைக்களத்தினர் தற்காலிகமாக இடை நிறுத்தித் திரும்பிச் சென்றனர். (எ-100,27,66)

## கிளிநொச்சியில் அறுவடை விழா

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கையின் அறுவடை விழா நேற்று வியாழக்கிழமை சிறப்புற்றது.

இரணைமடு கமக்கார அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு பன்னங்கண்டியில் இடம்பெற்றது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் மற்றும் விவசாயத்திணைக்களத்தினர், நீர்ப்பாசனத்திணைக்களத்தினர், கிளிநொச்சி கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்புகள் மற்றும் விவசாயிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-ரி2 -113)





## அச்சுறுத்திய முதலைகள் பிடிக்கப்பட்டு ஒப்படைப்பு

*வல்வை ஊரவர்கள் முன்னெடுப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 28

வல்வெட்டித்துறைப் பகுதிகளில் நீண்டகாலமாக முதலைகள் அச்சுறுத்தி வந்த நிலையில் 5 முதலைகளை ஊரவர்கள் பிடித்து வனஉயிரிகள் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர். நேற்றுமுன்தினம் புதன்கிழமை இந்தச் செயற்பாட்டில் ஊரவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆற்று நீரேரியில் முதலைகளால் அச்சுறுத்தல் நீண்டகாலமாக ஏற்பட்டு வந்தது. இந்த நிலையில் ஊரவர்கள் இணைந்து ஆற்றுநீரேரியிலிருந்து 4 முதலைகளையும் கொம்மந்துறைப் பகுதியிலுள்ள நீர்ச் சகதியில் ஒரு முதலையையும் பாதுகாப்பாகப் பிடித்து ஒப்படைத்தனர். (ச-ரி2-26)

## ம.எண்ணெய் ஊற்றி மரக்கன்றுகள் அழிப்பு

### பாதகர்களைத் தேடி பொலிஸார் வலை

யாழ்ப்பாணம், ஜூலை 28

சனசமூக நிலைய வளாகமொன்றிலுள்ள பூச்செடிகள், பயன்தரு மரக்கன்றுகளை இனந்தெரியாத விஷமிகள் மண்ணெண்ணெய் ஊற்றி அழிக்கும் ஈனச் செயல் சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது. அவர்களைத் தேடி வலைவீசியுள்ளோமென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலி செல்வநாயகபுரம் வீதியிலுள்ள வளர்மதி சனசமூக நிலைய வளாகத்திலேயே இந்தப் பாதகச் செயல் நடந்துள்ளது. முகங்களை மறைத்து பரலில் மண்ணெண்ணெய் எடுத்து வந்த இருவர், இந்த ஈனச் செயலில் ஈடுபட்டமை பதிவாகியுள்ளது. சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் விஷமிகள் இருவரும் ஊரவர்களால் அடையாளம்காட்டப்பட்டுள்ளனர். அவர்களைக் கைதுசெய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-ரி2-27)






பாவியர் போற இடமெல்லாம் இப்ப கொலையும், கொள்ளையுமாத்தான் இருக்கு. கிட்டடியில வவுனியாவில ஒரு வீட்டுக்க புகுந்து ஆக்களை வெட்டி, வீட்டுக்கு நெருப்பு வைச்சதால ரண்டு உயிர் போயிருக்கு. அவை ரண்டு பேரும் புருசனும், பெஞ்சாதியும். ரண்டு மூண்டு வருசத்துக்கு முதல் தான் இவை கலியாணம் கட்டியிருக்கினம். பெஞ்சாதி முஸ்லிம் எண்டு சொல்லுப்பட்டாலும், நாலைஞ்சு வருசத்துக்கு முதல் தான் மதம் மாறினவையாம். அதுக்கு முதல் அவா சைவம் தான்.

இப்ப விசயம் அதில்லை. அவான்ர புருசன் சுகந்தன் எண்டா உக்கிளாங்குளம் மட்டுமில்லை வவுனியாவே ஒருகாலத்தில நடுங்குமாம். அந்தளவுக்கு ஆள் கட்டப்பஞ்சாயத்தில பேமஸ். அதிலையும் ஆக்களைக் கடத்திக் கொண்டு போய், அடைச்சு வைச்சு, உடுப்பெல்லாம் உரிஞ்சு, நிர்வாணமாக்கி, பிறகு அடிச்சு, கண்ணுக்குள்ள ஸ்கூட்ரைவரால குத்தி சித்திரவதை செய்யிறதில ஆமிக்காரர் கூட சுகந்தனிட்ட பிச்சை எடுக்கோணுமாம். அந்தளவுக்கு கடும் ஆள். இப்பிடி ஆக்களைக் கடத்தி வைச்சு நிர்வாணமாக்கி சித்திரவதை செய்யிறதை வீடியோ எடுத்து, அதை எல்லாருக்கும் பப்ளிக் பண்ணுவம் எண்டு வெருட்டி அவையைப் பொலிஸுக்கு போகவிடாமலும் சுகந்தன் செய்திருக்கிறார். இப்பிடி எல்லா இடமும் சொறிஞ்சதால ஒருகட்டத்தில சுகந்தனை 'போட்டுத்தள்ள' கனபேர் வெளிக்கிட்டிருக்கினம். இது சுகந்தனுக்கு தெரியவர, மனுசியோட கொழும்புப் பக்கம் போட்டார். கனகாலத்துக்குப் பிறகு கிட்டடியில தான் ஆள் கொழும்பால வந்திருக்கு. அதுவும் சம்பவம் நடந்த வீட்டுக்கு (மனுசியின்ர ஒண்டவிட்ட தமையன்ர வீட்டை) அண்டைக்கு இரவுதான் சுகந்தனும் மனுசியும் வந்தவை. அவை வாறது ஆருக்குமே முதல்ல தெரியாது. முதல்நாள் தான் சுகந்தன் போன் பண்ணி சொல்லியிருக்கிறார். அப்பிடி ரகசியமா இருந்த விசயம் எப்பிடியோ லீக் ஆனதாலதான் அவரின்ர முந்தின எதிரியள் படையா வந்து, பழிதீர்த்திட்டுப் போயிருக்கினம். ஆரும் ஒராள் இப்பிடி கோரமாச் செத்தால் 'ஐயோ பாவம்' எண்டு எல்லாரும் கவலைப்படுவினம். ஆனால் சுகந்தன் செத்ததுக்கு சந்தோசப்படுறவைதான் கூடவா இருக்கு. அதுவும் சுகந்தன் முந்திச் செய்த சித்திரவதையளின்ர வீடியோக்களை போட்டு 'ஆட்டமிழந்தான் பாவி ஆனந்தமடி தோழி' எண்ட கணக்கில கொமண்ட்ஸ் போடுகினம்.

அண்டைக்கு சுகந்தனையும், மனுசியையும் வீட்டுக்க பூட்டிப் போட்டு நெருப்பு வைச்சிட்டு, வாள்வெட்டுக்காரர் போனவுடன பக்கத்து வீட்டுக்காரர்தான் அம்புலன்ஸுக்கும் பொலிஸுக்கும் போன் பண்ணிச் சொல்லியிருக்கினம். முதல்ல அம்புலன்ஸ் வந்து காயப்பட்ட சின்னாக்கள், பொம்பிளையளை ஏத்திக் கொண்டுபோய், ஹொஸ்பிட்டலில அவையை விட்டிட்டு திரும்ப வந்திருக்கு. வேற ஒருத்தரும் காயத்தோட நிக்கிற சிலமன் இல்லாததால அது திரும்பிப் போட்டுது. அதுக்குப் பிறகு பொலிஸ்காரர் வந்து வீட்டுக்குள்ள போய் பார்த்தால், சுகந்தன்ர மனுசி பேச்சுமூச்சில்லாமல் இருந்திருக்கிறா. அப்பதான் அவா உள்ளுக்க மாட்டின விசயம் தெரியவந்து, திரும்ப அம்புலன்ஸ் வந்து ஏத்திக்கொண்டு போனதாம். ஆனால் அதுக்குள்ள ஆள் செத்திட்டு. உடம்பில பெரிசா எரிகாயமில்லை, மூச்சுத்திணறித்தான் அவா செத்திருக்கிறா. முதலே அம்புலன்ஸ் வரேக்க கண்டிருந்தா ஒருவேளை அவா தப்பியிருப்பாஎண்டும்சொல்லுகினம்.



- பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் பல்கலை புலமைப்பரிசில் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

10 ஆவது ஆண்டில் கால்பதிக்கும் இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம், 'பல்கலைக்கழக மாணவர்களுக்கான வன்னிநேயம் புலமைப்பரிசில்' எனும் திட்டமொன்றை அறிமுகம் செய்துள்ளது. இந்தத் திட்டத்துக்கு ஒவ்வொரு வருடமும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு விண்ணப்பிக்கும் மாணவர்களில் தெரிவாகும் 5 மாணவர்களுக்குத் தலா ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான புலமைப்பரிசில் வழங்கப்படும். மேலும் 3 மாணவர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்பும் வழங்கப்படும். குடும்ப பொருளாதார ரீதியில் நலிவுற்ற பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுவரும் மாணவர்கள் இந்தப் புலமைப்பரிசில் திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை www.ivvsangam.com எனும் இணையத் தளத்தில் பதிவிறக்கம் செய்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்குமாறு சங்கம் அறிவித்துள்ளது. (ச)

## நெல்லியடி மத்திய கல்லூரி நூற்றாண்டு விழா 2ஆம் நாள்

யாழ்ப்பாணம், ஜூலை 28

நெல்லியடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு நிகழ்வுகள் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வரும் நிலையில், இரண்டாம்நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வுகளாக வருடாந்த பரிசளிப்பு விழா மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பாடசாலை அதிபர் க.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயல்படவேண்டிய நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். நண்பர்களால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. தொல்லைகள் நீங்கும்.

**மிதுனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகமுடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் இடையூறுகளும் நீங்கும். பிரச்சினைகள் ஏற்படலாம்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். உறவினர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். மனக் கசப்புகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புண்டு.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். உற்சாகம் ஏற்படும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். முக்கியமான முடிவு எதுவும் இன்று எடுக்க வேண்டாம். நண்பர்களின் சந்திப்பு

**மீனம்:** புதிய முயற்சிகளை தொடங்கவும். பெரியவர்களின் ஆலோசனை அவசியம். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும்.

# சிறுவர்களுக்கான தேவை கண்டிப்புடனான சுதந்திரம்

### கிளி.மாவட்டச் செயலர் அறிவுரை



**கிளிநொச்சி, ஜூலை 28**

**தமது பிள்ளைகளுக்கு கண்டிப்புடனான சுதந்திரத்தை வழங்கி அன்பாகவும் நம்பிக்கையூட்டும் வகையிலும் பெற்றோர் ஆதரவளிக்க வேண்டும். சிறுவர்களுக்கான உரிமைகளை வழங்குவதன் மூலம் அவர்களது நாளைய உலகம் நன்றாக அமையும்.**

-இவ்வாறு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற சிறுவர் உரிமை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுவர்களுக்குப் பெற்றோர் கண்டிப்புடனான சுதந்திரத்தை வழங்க வேண்டும். கண்டிப்பினூடாகத் துன்புறுத்தல்களை மேற்கொள்ளக் கூடாது.

என்ன விடயங்கள் நடந்தாலும் அதனைப் பெற்றோருடனும் ஆசிரியருடனும் மாணவர்கள் கலந்துரையாட வேண்டும். அதன்மூலம் நல்ல நம்பிக்கையும், பாதுகாப்பும் அவர்களுக்குக் கிடைக்கும்.

சிறுவர்களுக்கான உரிமையை மறுக்கக்கூடாது. அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டும். அந்தச் சுதந்திரத்தை மாணவர்கள் சரியான முறையில் பின்பற்ற வேண்டும். இதனூடாக சிறுவர்களது நாளைய உலகம் நன்றாக அமையும்- என்றார். (ச-27)

## சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு கிளிநொச்சியில் விழிப்புணர்வு

கிளிநொச்சி ஜூலை 28

சிறுவர் உரிமை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்வுகள் வேள்ட் விஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றன.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் விழிப்புணர்வுப் பேரணி ஆரம்பமாகி ஏ-9 வீதியூடா கிளிநொச்சி சேவைச் சந்தையைச் சென்றடைந்தது. அங்கு அரங்க நிகழ்வுகளாக முதலில் விழிப்புணர்வு நாடகம் அரங்கேற்றப்பட்டது. தொடர்ந்து சிறுவர் பாதுகாப்புப் பாடலும் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான மனுவும் கையளிக்கப்பட்டது. (ச-ரி2-27)





## நெல்லியடி மத்திய கல்லூரி நூற்றாண்டுதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 28

நெல்லியடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவின் முதலாம்நாள்நிகழ்வுகள் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகின.

பாடசாலை அதிபர் க. கிருஸ்ணகுமார் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

நூற்றாண்டு விழா நிகழ்வின் தொடக்க நிகழ்வாக கல்லூரி வளாகத்தில் நூற்றாண்டு நினைவிடம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து விழிப்புணர்வுப் பேரணி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது.

கல்லூரி முன்றிலில் ஆரம்பமாகிய நூற்றாண்டு விழா விழிப்புணர்வுப் பேரணியில் நெல்லியடி மத்திய கல்லூரி மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பெருமளவானோர் பங்கேற்றிருந்தனர். (ச)

## தெல்லிப்பழை - பருத்தித்துறையில் கண்புரையாளர் தெரிவு நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 28

தெல்லிப்பழை - பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவையுள்ள நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண் பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நோயாளர்களுக்கு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையிலும் பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நோயாளர்களுக்கு பருத்தித்துறை ஆதார மருத்துவமனையிலும் நடைபெறவுள்ளது என்று யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ச-ரி2-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிக்காக ஒன்றிணைவோம்

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப்புதைகுழி விசாரணைகளை சர்வதேசம் கையிலெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் வடக்கில் இன்று வெள்ளிக்கிழமை முழு அடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளைப் பத்தாண்டுகளுக்கும் மேலாகத் தேடிவரும் உறவுகள் இந்தக் கோரிக்கையையும், அழைப்பையும் முன்வைத்திருக்கின்றார்கள்.


தங்கள் கண்முன்னே கொண்டுசெல்லப்பட்ட சொந்தங்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாது தவிக்கும் உறவுகளுக்கு, நாட்டில் கண்டுபிடிக்கப்படும் மனிதப் புதைகுழிகள் பேரிடிகளாகவே இருக்கும். இப்போது கொக்குத்தொடுவாயில் மனித உடல்கள் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிப்பகுதி, முற்றுமுழுதாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசம். அங்கு உடல்கள் இராணுவத்தினரால் புதைக்கப்பட்டிருப்பதற்கான சாத்தியமே நூறுவீதம் இருக்கும் நிலையில், இலங்கை அரசாங்கத்தின் விசாரணைகள் நீதியானமுறையில் நடக்கும் என்பது கேள்விக்குறியே. ஏற்கனவே குருந்தூர்மலையில் நீதிமன்றம் போட்ட உத்தரவுகள் காற்றில் பறக்க விடப்பட்டு, பௌத்தத்தின் பேரால் நடக்கும் அட்டூழியங்களே இலங்கையின் நீதிபரிபாலனம் எந்தவகையில் மதிக்கப்படுகின்றது என்பதற்கு அத்தாட்சி. நாட்டில் இதற்கு முன்னரும் பல மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. ஆயினும் இலங்கை அரசாங்கம், அந்தப் புதைகுழிகள் பற்றிய விசாரணைகளை இழுத்தடித்து நீர்த்துப்போகச் செய்திருக்கின்றது. செம்மணி தொடக்கம் மன்னார் வரையில் புதைகுழிகள் பற்றிய எல்லாக் கதையாடல்களையும் நாமும் மறந்துவிட்டோம். முன்கண்ட அனுபவங்களின் அடிப்படையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முன்வைக்கும் கோரிக்கை நியாயமானதே. தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகள் நீதியான முறையில் நடக்குமானால் பத்தாண்டுகளாக நீடிக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்தில் ஏதேனும் உண்மை வெளிச்சத்துக்கு வரும் என்ற அவர்களின் எதிர்பார்ப்பும் சரியானதே.

இலங்கை அரசாங்கம் இந்த விசாரணைகளை நீதியான முறையில் நடத்தும் என்ற நம்பிக்கை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கோ அல்லது தமிழ் மக்களுக்கோ அறவே இல்லை. அகழ்வுப் பணிகள் நாட்டின் தொல்லியல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படலாம் என்று கூறப்படும் நிலையில், இந்தப் புதைகுழி விவகாரத்தின் இறுதி நிலைமையை இப்போதே ஊகித்துக்கொள்ளவும் முடியும். ஏனெனில் இப்போது இலங்கையின் இராணுவத்தை விடவும் தமிழ் மக்களின் நிலங்களை – போலியான சான்றுகளைக் காட்டி ஆக்கிரமிப்பதில் முன்னிற்பது தொல்லியல் திணைக்களம் தான். அப்படிப்பட்ட தொல்லியல் திணைக்களம், புதைகுழி விடயத்திலும் தன் கைங்கரியத்தைக் காட்டி, உண்மைகளையும் குழிதோண்டிப் புதைத்துவிடுமென்பதில் சந்தேகமில்லை. அதனாலேயே இந்த விடயத்தில் சர்வதேசத்தின் தலையீடு – கண்காணிப்பு – வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தவேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

'கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விடயத்தில் பக்கச்சார்பற்ற, சர்வதேசக் கண்காணிப்போடு கூடிய அகழ்வும், விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டால் இறுதிப் போரில் நடந்த மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை வெளிக்கொணரலாம். போருக்குப் பின்னர் நிகழ்த்தப்பட்ட கொடுமைகளை அம்பலப்படுத்தலாம். என்பது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் நம்பிக்கை. எனவேதான் அவர்கள் இந்த விடயத்தில் சர்வதேசத்தின் தலையீடு அவசியம் என்று கோருகின்றார்கள். தனியே இது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் கோரிக்கை மாத்திரமல்ல, சகல தமிழ்மக்களினதும் கோரிக்கையும் இதுதான் என்பதை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்த அனைவரும் இன்றைய முழுஅடைப்புப் போராட்டத்தில் பேதமின்றி ஒன்றிணையவேண்டும். அந்த ஒன்றித்த குரலே தமிழ் மக்களின் இந்தக் கோரிக்கையை செயலாக்கும் வழிவகைகளை நோக்கி சர்வதேசத்தை நகரவைத்து, புதைக்கப்பட்டோருக்கான நீதியைத் தேடவைக்கும்.

### நாளொரு நல்வார்த்தை

"பகைமையைப் பகைமையினால் தணிக்க முடியாது. அன்பின் மூலமாக மட்டுமே தணிக்க முடியும்" - புத்தர்



## இலங்கை வருகிறார் மக்ரோன்



பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் ஒரு குறுகிய பயணமாக இலங்கைக்கு வரவுள்ளார்.

அவர் இன்று இரவு பப்புவா நியூகினியாவில் தங்கியிருந்து திரும்பும் போது, இலங்கைக்கும் வந்துசெல்வார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

குறுகியபயணத்தில் அவர் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பார். பிரான்ஸ் ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதலாவது பயணம் இதுவாகும். பயணம் தொடர்பில் பிரான்ஸ்தலைவரால் முற்கூட்டியே அறிவிக்கப்பட வில்லை. (எ-26)

## கனேடிய அமைச்சராக பதவியேற்றார் ஹரி



கொழும்பு, ஜூலை 28

கனடா அரசாங்கத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக ஹரி ஆனந்தசங்கரி பதவியேற்றுள்ளார். பழங்குடியின சுதேசிய உறவுகளுக்கான அமைச்சராக ஹரி ஆனந்தசங்கரி நியமிக்கப்பட்டார். ஈழத்தமிழர் ஒருவர் கனடாவில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகப் பதவியேற்றுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நேற்றுமுன்தினம் தனது அமைச்சரவையை மாற்றியமைத்தார். ஏழு அமைச்சர்களை நீக்கினார். வெளிநாடுகளில் பதற்றங்கள் மற்றும் உள்நாட்டில் ஊழல் குற்றச்சாட்டுக்கள் அதிகரித்த நேரத்தில் அவரது அமைச்சரவை மாற்றப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தின்போதே ஹரி ஆனந்தசங்கரி அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-இ)

## ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வு!



### வலியுறுத்துகிறது பெரமுன

**கொழும்பு, ஜூலை 28**

**அதிகாரப்பகிர்வு விடயத்தில் ஒற்றையாட்சியை பாதுகாக்கும் வகையிலேயே பொதுஜன பெரமுன கட்சி செயற்படும் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒற்றையாட்சியை நிலைநாட்டுவதற்காகவே மஹிந்த ராஜபக்ச 30 வருடகால போரை முடிவுக்குக் கொண்டுவந்தார். 13 ஆவது திருத்தச் சட்ட விவகாரத்தில் மக்கள் ஆணையின் பிரகாரமே பெரமுன செயற்படும்.

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாகப் பேசுவதற்கு முன்னர் மாகாணசபைத் தேர்தல் தொடர்பாகவே கதைக்கவேண்டும். மஹிந்த ராஜபக்சவே வடக்கு, கிழக்கு மக்களுக்கு வாக்களிக்கும் நிலைமையை ஏற்படுத்திக் கொடுத்தார். வடக்கு, கிழக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்தினார். மஹிந்த ராஜபக்ச பதவிக்கு வருவதற்கு முன்னர், '13' நடைமுறையில் இருந்தாலும் மாகாண சபையில் மக்கள் பிரதிநிதித்துவம் இருக்கவில்லை. அவரே மக்கள் பிரதிநிதித்துவத்தை தெரிவுசெய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தினார். தற்போது அவர் பதவியில் இல்லை. மாகாணசபையிலும் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லை. '13' தொடர்பாகக் கதைக்க வேண்டுமானால் முதலில் தேர்தலை நடத்துவது பற்றிப் பேசப்படவேண்டும் - என்றார். (எ-44)

நாளை 29.07.2023 சனிக்கிழமை ஆடி 13

சுபநேரம் : 03.03 – 04.33
ராகுகாலம் : 09.03 – 10.33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாட்டின் வரிக்கொள்கைக்கு சகலரும் பங்களிக்க வேண்டும்

## வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 28

**நாங்கள் இந்த நாட்டின் குடிமக்கள் என்ற ரீதியிலும் இந்த நாட்டின் தேவைகளைப் பெற்றுக்கொள்பவர்கள் என்ற ரீதியிலும் எங்களுக்கு ஒரு பொறுப்பு இருக்கின்றது. அது நாட்டின் பொருளாதாரத்துக்குப் பங்களிப்பதே. அதற்கு வரிக்கொள்கையில் நாமும் இணைந்து கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி செயலகம் மற்றும் நிதியமைச்சின் வருமானத் திணைக்களம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் வரிக்கொள்கை மற்றும் ஐ.எம்.எப். நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தும் வகையில் 'ஒன்றிணைந்த நாட்டைக் கட்டியெழுப்புவோம்' எனும் கருப்பொருளிலான நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாகப் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாட்டின் தற்போதைய பிரச்சினை என்னவென்றால், வருமானத்தை விட எங்களால் செலவீடு செய்யப்படுகின்ற தொகை அதிகமாகவுள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக நாட்டில் நிதி நெருக்கடிச் சூழல் ஏற்பட்டுள்ளது.

பொதுவாக நாட்டில் வருமானம் ஈட்டக்கூடிய மூன்று துறைகள் காணப்படுகின்றன.

வருமானவரி, சுங்கவரி, மதுவரி ஆகிய மூன்று துறைகளாகும்.

இதில் வருமான வரி செலுத்துபவர்களில் நாட்டின் மொத்தக் குடித்தொகையில்குறைவானவர்கள்தான் வரியைச் செலுத்துகின்றனர்.

அதனால் வருமான வரியை அரசாங்கம் திருத்தம் செய்துள்ளது.

வரி செலுத்த வேண்டியவர்கள் வரியைச் செலுத்தாமல் இருக்கும் போது நாட்டின் சுமையை அரசு சுமக்கவேண்டியிருக்கும்.

சுங்கத் திணைக்களம் ஈட்டும் தொகையை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு சிறுதொகையை தான் வரியாகப் பெறுகிறது.

இதனால் நாட்டில் உள்ள டொலர் வெளிநாடுகளுக்குச் செல்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது.

நாட்டின் பொருளாதாரத்தையும், சேவைகளையும் சீராக்கவேண்டுமானால் மக்கள் வரி செலுத்துவதை தவிர்க்கக்கூடாது.

இந்த நாட்டின் குடிமக்கள் என்ற ரீதியிலும், இந்த நாட்டில் நாங்கள் பல தேவைகளைப் பெற்றுக்கொள்பவர்கள் என்ற ரீதியிலும் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பங்களிப்புச்செய்வதற்கு வரிக்கொள்கையில் இணைய வேண்டும் - என்றார். (ச-27)

# நினைவேந்தலில் தாக்குதல் பொலிஸ் மீது முறைப்பாடு!

கொழும்பு, ஜூலை 28

கறுப்பு ஜூலைக் கலவரத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூரும் நிகழ்வுக்கு பொலிஸார் இடையூறு ஏற்படுத்தித் தாக்குதல் நடத்தியமை தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கறுப்பு ஜூலை 40 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் கொழும்பில் இடதுசாரித் தலைவர்களாலும், சந்தியா எக்னெலிகொட உள்ளிட்டோராலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்த நினைவேந்தலுக்குப் பொலிஸாரும், இராணுவத்தினரும் தடைகளை ஏற்படுத்தியிருந்ததுடன், நினைவேந்தலில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதலும் நடத்தியிருந்தனர்.

சந்தியா எக்னெலிகொட, இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் பொலிஸாரால் தள்ளப்பட்டு தரையில் விழுந்துகிடக்கும் ஒளிப்படங்களும் சமூகவலைத்தளங்களில் வெளியாகியிருந்தன. சந்தியா எக்னெலிகொட மற்றும் இடதுசாரித் தலைவர்கள் பொலிஸாருக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருக்கிறார்கள். உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு இலங்கையில் உள்ள எல்லா இனத்தவருக்கும் உரிமை இருக்கு. ஆனால், கறுப்பு ஜூலை கலவரத்தில் கொலை செய்யப்பட்ட தமிழர்களைக் கடந்த 23ஆம் திகதி நாங்கள் நினைவுகூர்ந்தபோது, நினைவு கூருவதற்கான எங்களது உரிமை பறிக்கப்பட்டது. தனது வீடு கொளுத்தப்பட்டது என்று புலம்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனக்கலவரத்தில் கொளுத்தப்பட்ட வீடுகள், கொலை செய்யப்பட்ட தமிழர்கள் தொடர்பில் ஏன் பேசுவதில்லை? கொலை செய்யப்பட்ட தமிழர்களுக்கு விளக்கேற்றி நினைவு கூருவதற்கு முயற்சித்தபோது, அந்த விளக்குகளை சப்பாத்துக் கால்களால் எட்டி உதைத்து உடைத்தெறிந்திருந்தார்கள். இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தோம் என்று சந்தியா எக்னெலிகொட உள்ளிட்டோர் தெரிவித்தனர். (எ-இ)

# வடக்குக் கராத்தே போட்டியில் கிளி. சகோதரர்கள் தங்கம்!









கிளிநொச்சி, ஜூலை 28

வடக்கு மாகாண கராத்தே போட்டியில் கிளிநொச்சி மருதநகர் கிராமத்தைச் சேர்ந்த அண்ணனும் தங்கையும் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

கடந்த வாரம் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தின் உள்ளக விளையாட்டரங்கில் வடக்கு மாகாண கராத்தே போட்டி இடம்பெற்றது.

இதில் 11 வயதுக்குட்பட்டோருக்கான 'கட்டா' போட்டியில் கலையமுதன் சௌபர்ணிகா, 21 வயதுக்குட்பட்டோருக்கான 'குமித்' போட்டியில் கலையமுதன் பாரிதகன் ஆகிய சகோதரர்கள் தங்கப்பதக்கத்தை வென்றுள்ளனர். (ச-214)

# மருந்து, உபகரணம் இல்லை செயலிழக்கும் பற்சிகிச்சை



பற்சிகிச்சைக்குத் தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்கள் இன்மையால் நாட்டில் மருத்துவமனைகளின் பற்சிகிச்சை மையங்கள் செயலிழந்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் பல் மருத்துவ நிபுணர்கள் சங்கம் சுகாதார அமைச்சுக்கு அறியப்படுத்தியுள்ளது. பல் மருத்துவ சேவையை தடையின்றி முன்னெடுத்துச் செல்ல 2 ஆயிரம் வகையான மருந்துகள் அவசியமாகும். அவற்றில் 230 வகையான மருந்துப்பொருள்கள் மற்றும் உபகரணங்கள் உடனடியாக வழங்கப்படவில்லையெனில் பல் மருத்துவ சேவையின் வீழ்ச்சியைத் தடுக்க முடியாது. எனவே சுகாதார அமைச்சு இதுதொடர்பில் கவனம் செலுத்தி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த சங்கத்தின் செயலாளர் மஞ்சுள ஹேரத் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# 'மல்வத்து ஓயா' திட்டத்துக்கு கைகொடுக்கின்றதாம் சீனா

## ஜனாதிபதி தெரிவித்தாரென சாள்ஸ் எம்.பி. சுட்டிக்காட்டு

வவுனியா, வெண்கலச் செட்டிகுளம் பகுதியை உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்படும் மல்வத்து ஓயா திட்டம் எதிர்காலத்தில் சீனாவின் நிதியுதவியில் முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளாரென வன்னி மாவட்டச் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை [illegible] இடம்பெற்றது.

இதன்போது வவுனியா, வெண்கலச் செட்டிகுளம் பகுதியை உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்படும் மல்வத்து ஓயா திட்டத்தால் 55 ஏக்கர் விவசாயக் காணிகளுக்குரிய 33 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்கள் இரண்டு பயிர்ச்செய்கையில் ஈடுபடாமையால் நஷ்டஈடு வழங்குமாறுகோரிக்கைவிடுத்துள்ளனரென செட்டிகுளப் பிரதேச செயலாளர் சுலோஜனா சுட்டிக்காட்டினார்.

அதற்குப் பதிலளிக்கையிலேயே சாள்ஸ் நிர்மலநாதன், இந்தத் திட்டத்துக்கு கடந்த அரசாங்கத்தால் இதற்கென 23 ஆயிரம் மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக நிதி பெறமுடியாதமையால் இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது.

எதிர்காலத்தில் சீனாவின் உதவி மூலம் அதனைச் செய்ய முடியும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதேவேளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கும் மக்களது காணி கையகப்படுத்தப்பட்டால் மாற்றுக் காணிகளும் வழங்கவும் உரிய திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தல்

**செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நவீன அரிசி ஆலை, பப்பட ஆலை என்பன ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.** குத்தகைக்கு எடுக்க விரும்புபவர்கள் கேள்விப் பத்திரங்களை எதிர்வரும் 2023.08.10 இற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும். பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**குறிப்பு:** அரிசி ஆலை, பப்பட ஆலையினை பார்வையிட விரும்புபவர்கள் தொடர்புகளை மேற்கொண்டு அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

**பொதுமுகாமையாளர்**
**077 911 5145**

**தலைவர்,**
**செட்டிகுளம் பலநோக்குக் கூ. சங்கம்,**
**பிரதான வீதி, செட்டிகுளம்.**
**077 174 7147**



## வளர்ப்புக்கான கால்நடைகள் ஏலவிற்பனை

எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல கறவைப்பசுப் பண்ணையில் பராமரிக்கப்பட்டு வரும் கால்நடைகளுள் எமது பராமரிப்பிற்கு மேலதிகமாக உள்ள கால்நடைகளை வளர்ப்புக்காக எதிர்வரும் 05.08.2023 ஆம் திகதி காலை 9:30 மணிக்கு கீழ்க்குறிப்பிடப்படும் முகவரியில் உள்ள எமது இல்ல வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப பெற விரும்புவோர் குறித்த திகதியில் நேரடியாக வருகை தந்து ஏலவிற்பனையின் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்பதோடு குறித்த விற்பனைத் திகதிக்கு முன் கால்நடைகளைப் பார்வையிட விரும்புவோர் வாரத்தில் 07 நாட்களும் காலை 8.00 - 10.30, மாலை 4.00 -5.00 மணிக்கு முன் பார்வையிடலாம். அத்தோடு தாங்கள் ஏலத்தில் கோரிய பணத்தொகையினை உடன் செலுத்துவதுடன் அன்றைய தினமே தங்களது கால்நடைகளை இல்ல வளாகத்திலிருந்து வெளிக்கொண்டு செல்லுதல் வேண்டும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

**ஏல விற்பனை செய்யப்படும் இடம்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல பிரதான வளாகம் ஜெயந்திநகர்,**
**கிளிநொச்சி.**
**0214923118, 0773240950** - தலைவர் -



## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை
## உப அலுவலகம் - தெல்லிப்பளை

விண்ணப்பதாரர் - வரராஜசிங்கம் கோகுலன்
முகவரி - 218. புகையிரத நிலைய வீதி, தெல்லிப்பளை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை. தெல்லிப்பளை உப அலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம் -17. கிட்டங்கி வீதி. இல. 14/3இல் அமைந்துள்ள ஆதனம் சொந்தக்காரர் உரிமைகோருபவர் **வரராஜசிங்கம் கோகுலன்** என ஆதனப் பதிவேட்டில் உள்ளது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் க.சிவபாதம் முகதாவில் 328ஆம் இலக்கத்தில் 10.02.2018ஆம் திகதியில் முடிந்த நன்கொடை உறுதிப்படி சரவணமுத்து ஈஸ்வரன் அவர்களின் அற்றோனித்தத்து வக்காரராக மாணிக்கவாசகம் வரராஜசிங்கம் ஆகியோர் **வரராஜசிங்கம் கோகுலன்** என்பவர்களுக்கு நன்கொடையளித்துள்ளனர்.

**ஆதன விபரம்.**
வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று கட்டுவன் இறையுமான "பெரிய பணம் தோட்டம்" நிலப்பரப்பு 1பரப்பு குளி 05.36 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி.தவராஜா அவர்கள் வரைந்த 2669/2020.12.12 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு-01ஆக காட்டப்பட்டுள்ளது.
இதன் எல்லைகள்

| | | |
|---|---|---|
| **கிழக்கு** | - | பொன்னம்பலம் சிவலிங்கத்தினதும் பெண் உமாதேவியினதும் ஆதனம் |
| **வடக்கு** | - | செல்லப்பா காசிப்பிள்ளைக்குரிய ஆதனம் |
| **மேற்கு** | - | செல்வனேசன் சுபாயினியின் ஆதனம் |
| **தெற்கு** | - | கையொழுங்கை இவ்வெல்லைப்படி இதனடங்கலும் இதற்குரியவைகளும் |

மேற்குறித்த **ஆதனத்தை வரராஜசிங்கம்** கோகுலன் எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சுந்தரேஸ்வரன் சுகர்ஜன்**
**செயலாளர்.**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)** (cs 51424) (N-1)



## வேலையாள் தேவை

மேசன் வேலைக்கு வேலையாள் தேவை.
இடம் : இயக்கச்சி
T.P: 077 336 1750



## தேவை

**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்**
எமது ஆலயத்திற்கு ஒரு உதவி ஐயா மற்றும் மடப்பள்ளி அனுபவம் உள்ளவர்கள் தேவை. ஆர்வ முள்ளவர்கள் தங்கள் விண்ணப்பத்தை 03.08.2023 இற்கு முன் ஆலய காரியாலயத்தில் ஒப்படைக்கவும் அல்லது கீழ் தரப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு: தங்கள் விலாசம், தொலைபேசி எண் என்பவற்றை தெளிவாக குறிப்பிடவும்.**

**செயலாளர்**
**தர்மகர்த்தா சபை,**
**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்,**
**மானிப்பாய்.**



## 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 03 . 09 . 1936



இறப்பு 19 . 07 . 2002

அமரர் நயினையூர்
### திரு. இராமநாதன் கோபாலபிள்ளை
திதி : ஆடிமாத பூர்வபக்க ஏகாதசி (28.07.2023)

*எமது குடும்பத்தின் சுடர் குலவிளக்கே ஐயா!*
*யாவர்க்கும் இனியவராய் என்றென்றும்*
*இதய ஒளி பரப்பி வாழ்ந்த அன்புத் தெய்வமே!*
*இந்த மண்ணில் உங்களைப் போல்*
*இனி யாரை நாங்கள் காண்போம் ஐயா!*

ஐயாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அரசடிப்பிள்ளையாரையும். நயினை நாகபூசணி அம்மனையும். நல்லூரானையும் பிரார்த்திக்கின்றோம்.

**2/1 மூர்த்த விநாயகர் வீதி,**
**கடுக்காயடிலேன்,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.** (CS 51417) AH-1

**உங்கள் பிரிவால் துயருறும்,**
**பிள்ளைகள்.**



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 28.06.2023 அன்று
சிவபதமடைந்த எனது அன்பு மனைவி

**அமரர்**
### சண்முகநாதன் ஜெயராணி
**(ஓய்வுபெற்ற ஆசிரியை – யா / சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28.07.2023) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (29.07.2023) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
**(இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)**

**கம்பியவளை,**
**இடைக்காடு, அச்சுவேலி.**
**077 261 9637**

**ஐ. சண்முகநாதனும்,**
**உறவினர்களும்.**


*நியாயமான விலையில் தரமுள்ள உணவுகள்!*

# உணவக உரிமையாளர்கள் கௌரவிப்பு
# யாழ். மாவட்டச் செயலர் அறிவிப்பு

நியாயமான விலையில் தரமான உணவுகளை வழங்கும் உணவக உரிமையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு அறிவித்துள்ளார்.

'யாழ். மாவட்டத்திலுள்ள உணவகங்களுக்கு மக்கள் செல்லும்போது சில விடயங்களைக் கவனிக்கவேண்டும். உணவகங்கள் தரப்படுத்தப்பட்டுள்ளன. 'ஏ' தரத்திலுள்ள உணவகங்களையே மக்கள் நாடவேண்டும்' என்று மாவட்டச் செயலர் குறிப்பிட்டுள்ளார். 'உணவகங்களில் திடீர்ச் சோதனைகள் இனி அடிக்கடி முன்னெடுக்கப்படும். உணவுகளின் தரம் தொடர்பில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்' என்று சுகாதார மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதே வேளை- நியாயமான விலையில் தரமான உணவுகளை வழங்கும் உணவகங்களை, மாவட்டச் செயலரால் நியமிக்கப்படும் குழுவினர் பரிசீலிப்பார்கள். அதனடிப்படையில் அவர்களுக்கு கௌரவிப்பு மேற்கொள்ளப்படும் என்றும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (அ-ஒ.5)

# பூஜை அறையில் மயங்கி விழுந்த வயோதிபர் பலி!

வீட்டில் உள்ள பூஜை அறையில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த வயோதிபர் ஒருவர் நேற்றுக் காலை மயங்கி விழுந்து உயிரிழந்தார். அவரது இறப்புக்கான காரணம் கண்டறியப்படாமையால் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி, ஊறணி - புல்லாந்தி வைரவர் கோயிலடியைச் சேர்ந்த செல்வராசா செல்வமனோகரன் (வயது-67) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

குறித்த நபர் தனது வீட்டு பூஜை அறையில் வழமைபோன்று நேற்று அதிகாலை 5.30 மணியளவில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தபோது திடீரென மயங்கி விழுந்துள்ளார். உடனடியாக அவரை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்த்தபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவரால் தெரிவிக்கப்பட்டது. இறப்புத் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் இறப்புக்கான காரணம் கண்டறியப்படவில்லை. இந்தநிலையில் அவரின் உடற்கூற்று மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (அ-ம,100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணக வாழ்வின் 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 26 • 07 • 1945



விண்ணில் 28 • 06 • 2023

## அமரர் கந்தசாமி அன்னமலர்

"ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது" (தி.பா.116:15)

கடந்த (28.06.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி **அமரர் கந்தசாமி அன்னமலர்** அவர்களின் ஆன்ம இளைப்பாற்றுக்காக **நேற்று (27.07.2023) வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. 31 ஆம் நாள் நினைவு நாளாகிய இன்று (28.07.2023) வெள்ளிக்கிழமை** அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் மரணச் செய்தி கேள்வி யுற்றுப் பல வழிகளிலும் ஆறுதல் கூறி உதவி புரிந்தோருக்கும். இல்லத்துக்கு வந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியோருக்கும். இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும். உள்நாடு. வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி வாயிலாக அனுதாபச் செய்திகளைத் தெரிவித்து எமது துயரில் பங்குகொண்ட அன்பு உள்ளங்களுக்கும். மலர் மாலை அணிவித்தும். மலர் வளையங்கள் வைத்தும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும். கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் மற்றும் பதாகைகள் வெளியிட்ட அனைத்து அன்புள்ளங் களுக்கும். ஆற்றொணாத் துயர மத்தியில் பணிவன்புடன் நன்றி நவில்கின்றோம்.

**மல்வம், உடுவில்.** (CS/25639)AH-1 **குடும்பத்தினர்.**

# கேள்வி அறிவித்தல் மாற்றம்


வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் **20.07.2023 ஆம் திகதி மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை - 2023 இன் கீழ் சேந்தாங்குளம் நீர் விநியோகம் விஸ்தரிப்பு செய்தல் வேலைக்** காக கோரப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ள ஒப்பந்த காலமானது **60 நாட்களில் இருந்து 98 நாட்களாக** மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் சகலரும் கவனத்தில் கொள்ளவும்.

**திரு.சு.சுதர்ஜன்,**
**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை**
**28.07.2023** (CR/) AH-1

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

## திரு. பொன்னம்பலம் சற்குணராஜா



யாழ்ப்பாணம், புகையிரத நிலைய வீதி, முதலாம் ஒழுங்கையைப் பிறப்பிடமாக வும், தச்சந்தோப்பு கைதடியை வசிப்பிட மாகவும் கொண்ட பொன்னம்பலம் சற்குணராஜா நேற்று (27.07.2023) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பாக்கியம் தம்பதி களின் அன்பு மகனும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை மற்றும் நாகபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், அருட் சோதியின் அன்புச் சகோதரனும், ஆனந்தியின் அன்புக் கணவரும், சோபிநார்த், கோவர்த்தன், கீர்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், கோசலாவின் அன்பு மாமனாரும், அர்ஷ்ஜனனின் அன்புப் பேரனும், பழனித்துரையின் அன்பு மைத்துனரும், சதாரூபினி, ஹரிகரன், தர்ஷனா, ஜனகன் ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் தச்சந்தோப்பு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலம்பிராய் பிணமுருங்கை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**புதுக்காளி கோயிலடி,**
**தச்சந்தோப்பு, கைதடி.** (CS/51426)AH-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 647 6827, 077 662 4514, 077 588 2511**

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 • 12 • 1940



இறப்பு 25 • 07 • 2023

## திரு. தர்மலிங்கம் இராமகிருஸ்ணன்

(ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோக மேற்பார்வையாளர்)

யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், தாவடியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தர்மலிங்கம் இராமகிருஸ்ணன் கடந்த (25.07.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் (பழைய விதானையார்) பரிமளம் தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற யோகமணி அவர்களின் அன்புக் கணவரும், சுதர்ஜனா (கனடா), சுகந்தி (கனடா), சுதர்சன் (கனடா), சுதாயினி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தசவரதன் (கனடா), நகுலன் (கனடா), கம்சநந்தினி (கனடா), சுகந்தன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்சனா - றோகன் (கனடா), லவீன் (கனடா), சங்கவி (கனடா), சாலினி (கனடா), பூஜா (அமெரிக்கா), டினேஸ் (அமெரிக்கா), ஆஷா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும், டிலக்ஷா - துசான் (கனடா), ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், நாகராஜா, காலஞ்சென்ற சிறீகாந்தன், காலஞ்சென்ற இராமேஸ்வரன் மற்றும் ஜெயக்குமார், காலஞ்சென்ற சிறீபாலன் மற்றும் மதிவதனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விக்கினேஸ்வரி, காலஞ்சென்ற கெங்காதேவி மற்றும் யோகேஸ்வரி, ரஜனி, வசந்தகுமாரி, பரமேசன் ஆகியோரின் அன்புச் சகலனும், தங்கமணி, சரஸ்வதி, கந்தசாமி, தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தாவடியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**(076 642 9883)**

(cs51421 (N-1)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர் வின்சென்ற் வில்லியம் மரியதாஸ்
## (மரியதாஸ் மாஸ்ரர்)



மண்ணில் 09 . 01 . 1949

விண்ணில் 27 . 06 . 2023

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
நாட்கள் முப்பத்தொன்று கடந்து விட்டாலும்
இன்றும் உங்கள் வழிகாட்டலே
இவ்வுலகில் எம்மை வாழ வைக்கின்றது.
என்றும் எமது வாழ்க்கைப் பயணத்திற்கு
தெய்வமாக இருந்து வழிகாட்டுவீர்கள்
என்ற நம்பிக்கையில் வாழ்கின்றோம்.

எமது தந்தையின் மறைவுச்செய்திகேட்டு உடனே ஓடிவந்து ஆறுதல் கூறி உதவிகள் பல புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், தொலைபேசி வாயிலாகவும், வேறு வழிகளாலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பூக்கள், பூமாலைகள், பதாகை கள், துண்டு பிரசுரங்கள் வைத்து அஞ்சலி செலுத்திய அன்பு உள்ளங்களுக்கும், மறைவுச் செய்தி கேட்ட நாளில் இருந்து இறுதி பிரார்த்தனைகள் நடைபெறும்வரை பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனை வருக்கும், மேலும் இறுதி வணக்க ஆராதனை நிகழ்த்திய சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை அவர்களுக்கும், இரங்கல் திருப்பலியினை நிறைவேற்றிய அருட்பணியாளர்களுக்கும், ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும், மறைவுச்செய்தியை பிரசுரித்த பத்திரிகை, சமூக இணையத்தளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு நாளை (29.07.2023) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் ஆத்ம இளைப்பாறல் திருப்பலியிலும், அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**077 3636 801, 077 9037 576, 077 6107 801**

**குடும்பத்தினர்.**

(CS 25648) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்...

களில் (அநேகமாக நாளை சனிக்கிழமை) யாழ்ப்பாணத்தில் விற்பனைக்காக வழங்கப்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட சதொச கிளையின் முகாமையாளர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் நேற்றுத் தெரிவித்ததாவது:- இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகள் இது வரை கிடைக்கப்பெறவில்லை. எனினும் இரண்டு நாள்களில் முட்டைகள் வந்து சேர்ந்து விடுமென நம்புகிறோம். அதன் பின் யாழ்ப்பாணத்தில் உள்ள சதொசக் கிளைகளில் இந்திய முட்டை 35 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும். இதற்காக நுகர்வோர் விளம்பரப்படுத்தல் ஆயத்த நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுத்துள்ளோம் - என்றார்.

(அ-ம-125)

# சாதனையாளர்கள் கௌரவிப்பும் 'தூவானம்' திரைப்படக் காட்சியும்



கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் கனிஷ்டா 7, ரி.எஸ். பழைய மாணவர் அணியின் அனுசரணையில் பாடசாலையின் விஞ்ஞானப்பிரிவு உருவாக்கப்பட்டு மருத்துவம் மற்றும் பொறியியல் துறையை நிறைவு செய்த சாதனையாளர் கௌரவிப்பு மற்றும் தூவானம் திரைப்படக் காட்சி நிகழ்வும் கடந்த 3ஆம் திகதி திங்கட்கிழமை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

அதிபர் திருமதி ஜெ.தனபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், யாழ்போதனா மருத்துவமனை பொது மருத்துவ நிபுணர் மருத்துவக் கலாநிதி சி.சிவன்சுதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

முதலாவது அரங்கின் நிகழ்வாக வரவேற்புரையை போககட்டி அ.த.க. பாடசாலை அதிபரும் பழைய மாணவருமான தி.அபராஜிதனும், அறிமுகவுரையை கனிஷ்டா 7, ரி.எஸ். தாயக இணைப்பாளர் முனைவர் இ.சிறீஞானேஸ்வரனும், தூவானம் கலைப்படைப்பின் தயாரிப்பின் நோக்கம் தொடர்பான பார்வையை மருத்துவக் கலாநிதி சி.சிவன்சுதனும் ஆற்றினார்கள்.

இரண்டாவது அரங்கின் அறிமுகவுரையை கனிஷ்டா 7, ரி.எஸ். அணியின் பழைய மாணவரும் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆசிரியருமான அ.சத்தியானந்தனும் மூன்றாவது அரங்கின் அறிமுகவுரையை போக்கட்டி அ.த.க. பாடசாலை அதிபர் தி.அபராஜிதனும் நிகழ்த்தினர்.

இதேவேளை மருத்துவத்துறையில் செல்வி ஷர்ஷிக்கா யசோதரனும் பொறியியல் துறையில் இராசேந்திரன் மதுசனன் மற்றும் முத்தையா ருஷாந்தன் ஆகிய சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

(ய-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீது கனடா மேலாதிக்கம்



## வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் காட்டம்

கொழும்பு, ஜூலை 28

**கனடாவின் அறிக்கைகள் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு உதவுவதாக அமையாது. கனடா போன்ற நாடுகள் தமது மேலாதிக்க கொள்கைகளால் இலங்கை போன்ற நாடுகளின் உள்ளக விவகாரங்களில் செல்வாக்குச் செலுத்துவதற்கு தமக்கு உரிமை காணப்படுவதாக எண்ணுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எந்தவொரு நாட்டுக்கும் ஏதேனுமொரு விடயம் தொடர்பில் அறிக்கை விடுவதற்கான உரிமை காணப்படுகிறது. கறுப்பு ஜூலை என்பது இலங்கை வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பெருமையடையக் கூடிய விடயமல்ல. அது நாம் வெட்கப்பட வேண்டிய ஒரு சம்பவமாகும். ஆயினும் இதனைச் சில நாடுகள் அவற்றின் உள்ளக அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றன.

கனடா இது தொடர்பில் மாத்திரமின்றி பல விடயங்கள் தொடர்பில் இதற்கு முன்னரும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

கனடா போன்ற சில நாடுகள் தற்போதும் அவற்றின் மேலாதிக்கத்தை இலங்கை போன்ற நாடுகள் மீது செலுத்துவதற்கான உரிமை தமக்கு இருப்பதாகக் கருதுகின்றன. எனவே தான் அவ்வாறான எண்ணங்களின் அடிப்படையில் வெளியிடப்படும் கருத்துக்களை வெளிநாட்டலுவல்கள் அமைச்சு நிராகரித்து அறிக்கைகளை வெளியிடுகிறது.

கனடா போன்ற நாடுகள் இந்த விடயத்தில் தலையிடுவதாயின் இலங்கையின் இனப் பிரச்சினை, நல்லிணக்கம் என்பவற்றுக்கு தீர்வை வழங்க முற்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ளமுடியும். ஆனால் கனடாவின் செயற்பாடுகள் அவ்வாறு எந்த இலக்கையும் கொண்டதாக இல்லை என்பது கவலைக்குரியதாகும் - என்றார். (ஒ-இ)

# நீரில் மூழ்கி இளைஞர் சாவு!

கொழும்பு, ஜூலை 28

ஆலய வழிபாட்டுக்குச் சென்ற இளைஞர் ஒருவர், தாந்தாமலை குளத்தில் நீராடிய போது நீரில் மூழ்கிய நிலையில் மருத்துவமனைக்கு கொண்டுசென்ற போது இடைநடுவில் உயிரிழந்தார் என்று கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

களுவாஞ்சிக்குடி, எருவில் காளிகோவில் வீதியைச் சேர்ந்த மோகனசிங்கம் பிரகதீசன் (வயது-19) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். தாந்தாமலை முருகன் ஆலய வருடாந்தத் திருவிழா இடம்பெற்றுவரும் நிலையில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை களுவாஞ்சிக்குடி எருவில் பிரதேசமக்கள் ஆலய வழிபாட்டுக்குச் சென்றனர்.

இதன்போது அங்கு சென்ற குறித்த இளைஞரும் அவரது நண்பர்களுமாக தாந்தாமலை குளத்தில் நீராடிய போது குறித்த இளைஞர் நீரில் மூழ்கியதையடுத்து அவரை நண்பர்கள் காப்பாற்றி மகிழடித்தீவு மருத்துவமனையில் சேர்த்தனர். அவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்தார். (ஒ-22)

# அதிகளவு பொலிஸார் மாரடைப்பால் மரணம்!

## பொலிஸ் மருத்துவசேவை தகவல்

கொழும்பு, ஜூலை 28

நாட்டில் கடந்த வருடம் மாரடைப்புக் காரணமாகவே அதிகளவான பொலிஸாரின் உயிரிழப்புப் பதிவாகியுள்ளது எனப் பொலிஸ் மருத்துவசேவைப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த வருடம் பல்வேறு நோய்கள் காரணமாக இரு பெண் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட 250 பொலிஸார் உயிரிழந்துள்ளனர்.

அதில் வாகன விபத்து மற்றும் ஏனைய காரணங்களால் 51 பொலிஸாரும் தவறான முடிவெடுத்து 10 பொலிஸாரும் உயிரிழந்துள்ளனர். சிறுநீரக நோய், புற்றுநோய் மற்றும் பல்வேறு சுகவீனங்கள் காரணமாக 109 பொலிஸார் உயிரிழந்துள்ளனர். கடந்த வருடம் உயிரிழந்த 250 பொலிஸாரில் அதிகமானவர்கள் மாரடைப்புக் காரணமாக உயிரிழந்திருக்கிறார்கள். உயிரிழந்த பொலிஸாரின் மொத்த எண்ணிக்கையில் 31 சதவீதமாக இது பதிவாகியுள்ளது. அதிகளவிலான மனஅழுத்தங்கள், தூக்கமில்லாது தொடர்ந்து பணியாற்றுவது இதற்கான காரணங்களெனவும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். (ச-இ)

# ஆயுதக் களஞ்சியம் மாத்தறையில் முற்றுகை

கொழும்பு, ஜூலை 28


மாத்தறை பண்டாரத்தவெல்ல பிரதேசத்தில் ஆயுதக் களஞ்சியமொன்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மாத்தறை குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கிடைத்த தகவலின் பிரகாரம் இந்த ஆயுதக் களஞ்சியம் சுற்றிவளைக்கப்பட்டது.

அங்கு வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள், தோட்டாக்கள் என்பன மீட்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் எவரும் கைதுசெய்யப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் மாத்தறை பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி3-22)

# குப்பையை எரித்த தீ பற்றியது பனையில்!



## 7 பனைகள் நாசம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தொன்றில் 7 பனைகள் எரிந்தழிந்தன.

இளவாலை - நாதவோலை பகுதியில் நேற்று இரவு 8.30 மணியளவில் இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. குப்பைக்காக வைத்த தீ வடலியில் பற்றி பின்னர் 7 பனைகளில் பற்றியுள்ளது. இதையடுத்து தீ இடர் தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகரசபைக்குத் தகவல் வழங்கியதையடுத்து தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-125)

# சீனாவே இலங்கைக்கு உண்மையான நண்பன்

## கூறுகிறார் பாதுகாப்புச் செயலர்

கொழும்பு, ஜூலை 28

இலங்கைக்கு உறுதியான ஒரு நட்பை சீனா வழங்கியுள்ளதாக பாதுகாப்புச் செயலர் கமால் குணரத்ன தனது நன்றிகளை சீனாவுக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

'சர்வதேச ரீதியில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் சீனாவுக்கெதிராக முன்வைக்கப்பட்ட போதும், சீனா இலங்கைக்கு ஓர் உண்மையான நண்பனாக இருந்து, தோள்கொடுத்து உதவியதுடன் தேவையான புரிதலையும் அனுசரணையையும் வழங்கியது' என சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தின் 96 ஆவது ஞாபகார்த்த விழாவில் கலந்து கொண்டபோது அவர் தெரிவித்தார். (ஒ-இ)


## நன்றி நவிலலும் ஆத்ம சாந்தி வழிபாடும்



**ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள்**

தோற்றம் 27.05.1925 — மறைவு 15.07.2023

இடம் : நகுலேஸ்வரம்

காலம்: 29.07.2023 சனிக்கிழமை

கடந்த 15.07.2023 சனிப் பிரதோஷத்தன்று சிவசாயுஜ்ஜம் அடைந்த கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்களின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும் தொலைபேசி முகநூல் மின்னஞ்சல் ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அன்னாரது இறுதி யாத்திரையில் பங்கு கொண்ட அனைவருக்கும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்து கொண்டிருக்கும் அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வருகின்ற 29.07.2023 சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் வழிபாடு பூரணத்துவமடைய தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தயவன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

நகுலேஸ்வரம்
0776366338 / 0212244436

குடும்பத்தினர்.

(CS 25633) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்...

இன்றைய நீதிகோரும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலத்தில் இருந்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் வரையில் பேரணியொன்றும் இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்டனப் பேரணியில் கலந்துகொள்பவர்களுக்காக சிறப்புப் பேருந்துகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(அ-ம)

## தனியார்...

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் சர்வதேச நிபுணத்துவத்தையும் கண்காணிப்பை வலியுறுத்தியும் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்துக்கும் ஹர்த்தாலுக்கும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்த நிலையில், ஹர்த்தாலைப் பலப்படுத்தும் வகையில் முல்லைத்தீவில் இன்று தனியார் பேருந்துகள் சேவையில் இடம்பெறாது என்று முல்லைத்தீவு மாவட்ட தனியார் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

(அ-ம)

## உணவுப்...

காலத்தில் நிர்ணய விலையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அடுத்தமாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் சிற்றுண்டிகளின் அதிகபட்ச சில்லறை விலை தொடர்பாக பிரதேச செயலர்களால் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் பணித்துள்ளார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலர்கள், பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர், சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பிரதிநிதிகள், உணவகங்களின் உரிமையாளர்கள் இதில் பங்கேற்றனர்.

பொருளாதார நெருக்கடியின்போது பொருள்களின் விலை உயர்வாக இருந்தபோது விலை அதிகரிக்கப்பட்ட சிற்றுண்டிகளின் விலை யாழ். மாவட்டத்தில் பெருமளவில் குறைக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. அதேபோன்று சோற்றுப் பொதிகளின் விலைகளும் குறைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் சிற்றுண்டிகள் மற்றும் உணவுப்பொதிகளுக்கு ஆகக்கூடிய சில்லறை விலையாக எவ்வளவு ரூபாவை நிர்ணயம் செய்யலாம் என்பது தொடர்பில் 15 பிரதேச செயலர்களையும் அறிக்கையிடுமாறு மாவட்டச் செயலர் பணித்துள்ளார்.

(அ-ஒ.5)

## நான்கு...

உயிரிழந்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்திரகுமார் பாதுசன் (வயது-4) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

இந்தத் துயரச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடந்துள்ளது. குறித்த சிறுவன் காணியில் தனியாக விளையாடிக் கொண்டிருந்தபோது இந்த அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது. சிறுவனைக் காணாது தந்தை தேடியபோது பாதுகாப்பற்ற மண்கிணற்றின் சேற்றில் மூழ்கிய நிலையில் சிறுவன் காணப்பட்டதையடுத்து உடனடியாக மீட்டு கிளிநொச்சிக்கு மருத்துவமனைக்குக் கொண்டுசென்றுள்ளார். ஆயினும் சிறுவன் மருத்துவமனைக்குச் செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளான். சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ-ச-113)

## புதைகுழிகளுக்கு...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இது தொடர்பில் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் தமிழர் பிரதேசங்களில் இதுவரைகாலமும் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் விவகாரங்கள் பூசிமெழுகப்பட்டு, காத்திரமான நடவடிக்கைகள் எதுவுமின்றி நீர்த்துப்போகச் செய்யப்பட்டமையே வரலாறு. இதே போன்று கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திலும் நடைபெறாதிருக்க வேண்டும் என்பதோடு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி உட்பட தமிழர் பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளும் உரிய வகையில் சர்வதேச கண்காணிப்புடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மைகளை வெளிக்கொணர வேண்டியது அவசியமானது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இந்த விவகாரத்தின் நியாயத்தன்மையைப் புரிந்துகொண்டு, இதனை தமது தனிப்பட்ட சுயலாபங்களுக்கோ, அரசியல் தேவைகளுக்கோ பயன்படுத்தாது உண்மையான தீர்வை வலியுறுத்தி சிங்கள முற்போக்கு சக்திகள் உட்பட்ட அனைத்து தமிழ்த் தரப்பினரும் ஒன்றிணைந்து போராட வேண்டுமென்பதோடு அனைவரினதும் முழு ஆதரவினையும் வேண்டி நிற்கிறோம் - என்றுள்ளது.

(அ-ம,27,26,125)

## கொலைக்...

ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவித்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

இலங்கையில் சுதந்திரத்துக்குப் பிந்தைய காலத்தில் பல்வேறு மனிதப் புதைகுழிகள் சூரியக்கந்த, செம்மணி, யாழ்ப்பாணத்தின் துரையப்பா விளையாட்டரங்கு, மாத்தளை, களுவாஞ்சிக்குடி மற்றும் மன்னார் போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டன. இலங்கையினை ஆட்சி செய்த அரசாங்கங்கள் இன ரீதியாகவும், மத ரீதியாகவும், வர்க்க ரீதியாகவும் மேற்கொண்ட அடக்குமுறைகளுக்கு எதிராக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் போராடிய பல்வேறு இயக்கங்களையும், அமைப்புகளையும் சேர்ந்தோர் நீதிக்குப் புறம்பான முறையில் இராணுவமயமாக்கப்பட்ட சூழலில் படுகொலை செய்யப்பட்டனர்.

அத்துடன் மனித உரிமைகளை முன்னிறுத்திச் செயற்பட்ட செயற்பாட்டாளர்களும், பத்திரிகையாளர்களும், மாற்றுக் கருத்தினைக் கொண்டிருந்த வெவ்வேறு போராட்ட இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் கூட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்களுக்கு என்ன நடந்தது? என்று தெரியாத நிலை இன்றுவரை நீடிக்கிறது. இவ்வாறு போராட்டங்களில் ஈடுபட்டவர்களினதும், செயற்பாட்டாளர்களினதும், பொதுமக்களினதும் உடலங்களின் எச்சங்களே இந்தப் புதைகுழிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

நாட்டில் இடம்பெற்ற வன்முறைகளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உடலங்களே இந்தப் புதைகுழிகளிலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவா? என்ற பயம் அவர்களின் உறவினர் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் உருவாகியுள்ளது. இந்தப் புதைகுழிகள் பற்றி முறையான விசாரணைகளை முன்னெடுத்து நீதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு இலங்கையினை ஆட்சி செய்த அரசாங்கங்கள் நம்பகமான எந்தச் செயன்முறையிலும் ஈடுபடவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்ந்தும் வேதனையினை அனுபவித்து வருவதுடன், கடுமையான பொருளாதாரச் சுமையினையும், அரசின் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

அண்மையில் முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய்ப் புதைகுழியில் கண்டுபிடிக்கப்பட்ட உடைகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சீருடைகளாக இருக்கின்றன. சரணடைந்த, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களுக்கு என்ன நடந்தது? என்ற கேள்வியினை முன்வைத்து நீதிகோரும் வகையில் அவர்களின் உறவினர்களும், பொதுமக்களும் பல வருடங்களாகத் தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகள் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது? என்பது தொடர்பில் பயத்தினையும், வேதனையினையும் அவர்களின் குடும்பத்தவர் மத்தியிலும், ஒட்டுமொத்தச் சமூகத்திலும் ஏற்படுத்தியிருக்கிறது.

இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஹர்த்தாலும், பேரணியும் கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழி குறித்து நாட்டினதும், உலகினதும் கவனத்தினையும் ஈர்க்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எனவே, இந்தப் போராட்டத்துக்குப் பொதுமக்களும், தொழிற்சங்கங்களும், பொது அமைப்புகளும் ஆதரவு கொடுக்க வேண்டும். கொக்குத்தொடுவாய்ப் புதைகுழி குறித்தும், நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஏனைய புதைகுழிகள் குறித்தும் முறையான, நேர்மையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு இந்தப் புதைகுழிகளுக்குப் பின்னணியாக இருந்த வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களது உறவுகளுக்கும் நீதி கிடைக்கவேண்டும்.

அத்துடன் வடக்கு - கிழக்கிலே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது? என்பது குறித்து அரசாங்கம் உடனடியாக மக்களுக்குப் பொறுப்புக் கூறுவதுடன் அவர்களிற்கான நீதியும் கிடைப்பதற்கு வழி செய்யப்படல் வேண்டும். இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஹர்த்தாலுக்கும், பேரணிக்கும் தனது பூரண ஆதரவை வழங்குகின்றது - என்றுள்ளது.

(அ-ம-66)

## வெளியக...

முடிவை எடுக்கவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் தெரிவித்துள்ளோம் - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை நடைபெற்ற சர்வகட்சி மாநாடு தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகளின் தலைவர்கள் இந்த மாநாட்டுக்கு வந்திருந்தார்கள். தேசிய நல்லிணக்கம் தொடர்பில் பலரும் தத்தமது கருத்துகளைத் தெரிவித்தார்கள். பொதுவாக இந்தப் பேச்சில் முன்னேற்றம் எதனையும் நாம் அவதானிக்கவில்லை. ஆனால், சமாதானமாக வழிநடத்தப்பட வேண்டிய விடயங்களில் பெரிய கருத்து வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. கருமங்களை முன்னெடுப்பதற்குக் குழுக்களை ஜனாதிபதி நியமிப்பார் என எண்ணுகின்றோம். எங்களைப் பொறுத்தவரைக்கும் முக்கியமான விடயங்களை ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும், தமிழ் மக்களின் அபிலாஷைகள் அங்கீகரிக்கப்படவேண்டும், வடக்கு - கிழக்கில் சரித்திர ரீதியாகத் தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்து வந்தார்கள் என்ற அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வு வழங்கப்படவேண்டும் போன்ற விடயங்களை ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளோம். இந்தக் கருமங்கள் நிறைவேற முழுமையான ஒத்துழைப்பை நாங்கள் தங்களுக்கு வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்றும் ஜனாதிபதியிடம் கூறியுள்ளோம்.

முழுமையான உள்ளக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படாவிட்டால் அதற்கு மாற்றீடாக நாங்கள் வெளியக சுயநிர்ணய உரிமையைக் கோருவோம். ஆகையால் இந்தக் கருமங்களை நாட்டின் நன்மை கருதி நாட்டில் வாழ்கின்ற மக்களின் நன்மை கருதி தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைக் கருதி நல்ல முடிவை எடுக்கவேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் தெரிவித்துள்ளோம். அவர் என்ன முடிவை எடுப்பார் என்று பொறுத்திருந்து பார்ப்போம்' - என்றார்.

(அ-ம-22)

## வசந்த...

முதலிகே பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

2020ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது குழப்பம் ஏற்படுத்தியமை தொடர்பில் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டமையை அடுத்தே நேற்று அவர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

(அ-ம)

## 10 கிராம்...

வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு பெண்கள் உட்பட நால்வரை மானிப்பாய் பொலிஸார் நேற்று வியாழக்கிழமை கைதுசெய்தனர். அவர்கள் பயணித்த ஓட்டோவும் பறிமுதல் செய்யபட்டுள்ளது என்று மானிப்பாய் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி உதயனுக்கு தெரிவித்தார்.

புலனாய்வுத் தகவல்களுக்கு அமைய ஓட்டோ ஒன்றை மறித்துச் சோதனையிட்டபோதே மேற்படி நால்வரும் கைதுசெய்யப்பட்டனர். இதில் 28 வயதான இளைஞரிடம் இருந்து 4 கிராம் 250 மில்லிகிராம் ஹெரோய்னும், 25 வயதான யுவதியிடம் இருந்து 2 கிராம் 820 மில்லிகிராம் ஹெரோய்னும், 47 வயதான மற்றொரு பெண்ணிடம் இருந்து 3 கிராம் 150 மில்லிகிராம் ஹெரோய்னும் கைப்பற்றப்பட்டன. இவர்களுக்காக ஓட்டோவைச் செலுத்திய ஓட்டோச் சாரதியும் இதன்போது கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபர்களில் 28 வயதான இளைஞனுக்கு வேறு இரு வழக்குகளில் 5 பிடியாணைகள் உள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் நேற்று கறுப்பு ஜூலை நிகழ்வு





கிளிநொச்சி, ஜூலை 28

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி சேவைச்சந்தை முன்றிலில் நேற்று வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் நல்லதம்பி சிறீகாந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் பொதுச்செயலாளர் அனந்தி சசிதரன், மகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களான அரிய நேந்திரன், சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம-27)


**கட்டட வேலையாட்கள் தேவை**

✓மேசன் ✓லேபர்

✓Bar Binder (கம்பி வளைப்பவர்)

Note:- கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

MAHAAN ENTERPRISES

077 994 4439

**தவறவிடப்பட்டுள்ளது**

நேற்று (27.07.2023) மதியம் 1.00 - 1.30 மணிக்குள் வைத்தியசாலை வீதி BOC இற்கும், மதர் கெயாருக்கும் இடையில் கார் திறப்பு தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

077 224 2787

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள 14 அங்குலம் China மர அரிவு இயந்திரம் உடன் விற்பனைக்குண்டு.

077 199 6117

**காணி விற்பனைக்கு**

தும்பளை (பருத்தித்துறை) யில் கட்டி முடிக்கப்படாத வீட்டுடன் கூடிய இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (CS/51360) AH-1

076 037 1963


## தம்பியை காப்பாற்றிய அண்ணன் சாவு

கடலில் அடித்து செல்லப்பட்ட தம்பியை காப்பாற்ற முயற்சித்த அண்ணன் உயிரிழந்த சம்பவம் அஹங்காம மலைக்கு அருகே இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமன்தினம் புதன்கிழமை நடந்துள்ளது. கடலலை தம்பியை அடித்துச் செல்வதை அவதானித்த அண்ணன் உடனடியாக சகோதரனைக் காப்பாற்ற கடலில் குதித்துள்ளார். இதன்போது நீண்ட முயற்சியின் பின் தம்பி காப்பாற்றப்பட்ட நிலையில், தம்பியை காப்பாற்றச் சென்ற அண்ணன் நீரில் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## யாழ். பல்கலையில் உணவுத் திருவிழா



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தில் சுற்றுலா விருந்தோம்பல் முகாமைத்து வக்கற்கைகள் துறை இரண்டாம் வருட மாணவர்களின் ஏற்பாட்டில் மாணவர்களின் முயற்சியாண்மையை விருத்தி செய்யும் நோக்கத்தில் உணவுத் திருவிழா கடந்த 24ஆம் திகதி திங்கட்கிழமை காலை திருநெல்வேலி பால்பண்ணையில் அமைந்துள்ள முகாமைத்துவ மற்றும் வணிக பீடவளாகத்தில் இடம்பெற்றது. நிகழ்வை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா ஆரம்பித்து வைத்தார். தமிழ் - சிங்கள - இஸ்லாமிய கலாசார உணவு வகைகள் மற்றும் மேலைத்தேய உணவு வகைகள், குடிபானங்கள் எனப் பல்வேறுபட்ட உணவுகள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீடாதிபதி பா.நிமலதாசன், சுற்றுலா விருந்தோம்பல் முகாமைத்துவக் கற்கைகள் துறைத் தலைவரும் பேராசிரியருமான சுபேசன், விரிவுரை யாளர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ய-40)


**காணி விற்பனை**

சாவகச்சேரி வடக்கு மீசாலைப் பகுதியில் (டச்சு வீதி) 5 பரப்புக்காணி கிணறு, தென்னை உள்ளடங்கலாக விற்பனைக்குண்டு. விலைபேசித் தீர்மானிக்கப்படும். (CS/51423)AH-1

077 991 5465, 074 067 5190

**காணி விற்பனைக்கு**

K.K.S. வீதியில் யாழ். சிவன் கோவிலுக்கும் முட்டாஸ் கடைச் சந்திக்கும் இடையில் SHOPPING PLAZA கட்டத் தயார் நிலையிலுள்ள உறுதியினால் வரையறுக்கப்பட்ட 1986 ஆம் ஆண்டுக்கு முன் கொடையளிக்கப் பட்டதனால் மாநகரசபையின் 1986 ஆவணங்களுக்கு உட்படாத, கட்டட அனுமதிக்கு நில அளவை தேவைப்படாத இரண்டு பரப்பு 3.6 குளி நீள் சதுர வெற்றுக்காணி விற்பனைக்குண்டு.

அதிக விலை கொடுப்பவர்களுக்கு விற்கப்படும். தரகர் தேவையில்லை. உண்மையாக ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

076 052 4895

**மணமகள் தேவை**

01. கந்தர்மடம் - மானிப்பாய். இந்து கௌரவகுலம்(V)உத்தராடம். 1989. Masters of Science in Biochemistry MSc.(Canada) கனடா. Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 34257
02. உடுப்பிட்டி - கரணவாய். இந்து கௌரவகுலம் (V) அவிட்டம். 1990. BSc Engineering (Newzealand), Newzealand Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 34184
03. மாவிட்டபுரம் - இந்து கௌரவகுலம் (V) விசாகம். 1984. Electrical Engineer Singapore Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33732
04. சுருவில் - வண்ணார்பண்ணை. இந்து கௌரவகுலம் (V) அச்சுவினி. 1987. BSc (Moratuwa), MSc (Australia), Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33541
05. திருநெல்வேலி - இந்து கௌரவகுலம் (V) ரேவதி 1985. Network Administration, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33507
06. கொடிகாமம் - Jaffna Town, இந்து கௌரவகுலம் (V) ஆயிலியம். 1980. Lowyer, Australia Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32385
07. மானிப்பாய் - இந்து கௌரவகுலம் (V) உத்தரம். 1974. Business Management (UK), Uk Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32102

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Phone 077 539 3728 Whatsapp - 077 803 8193


## சேவைக்கு வரிசையில் நின்ற முதியவர் சாவு!

பதுளை மாவட்டம் எல்ல பிரதேச செயலகத்தில் சேவை பெறச் சென்ற முதியவர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளாரென எல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர். 76 வயதுடைய முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அஸ்வெசும நலன்புரித் திட்டத்துக்கான விண்ணப்பப்படிவம் பெறுவதற்காக பிரதேச செயலகத்தின் முன்னால் வரிசையில் நீண்டநேரம் முதியவர் காத்திருந்தார். இதன்போதே அவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளாரென வரிசையில் நின்றோர் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் எல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.